திருவள்ளுவர் ஆண்டு 2039

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி :102 பகுதி : 7 சூலை -0



மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

# கலப்புத் திருமணம்

ஆறுவிரல் ஐம்பொறி
வீரசோழபுரம், கள்ளக்குறிச்சி

பயிரொன்று எருவதனை மணந்து கொண்டால்
பால்பிடிக்கும் கலப்புமணம்! அரிசி உண்டு.
கயிரொன்று வாளிதனை மணந்து கொண்டால்
கலையழகு கலப்புமணம்! தண்ணீர் உண்டு.
உயிரெழுத்து மெய்யெழுத்தை மணந்து கொண்டால்
ஓசைதரும் கலப்புமணம்! சொற்கள் உண்டு.
உயிர்க்காற்றை கரும்புகைதான் மணந்து கொண்டால்
ஒருநாளும் நோயற்றவாழ்வு இல்லை.

நல்லதொரு பொன்,செம்பை மணந்து கொண்டால்
நன்மைதரும் கலப்புமணம்! நகையே உண்டு.
இல்லதனை காலதர்கள் மணந்து கொண்டால்
இருளில்லாக் கலப்புமணம் ! காற்றும் உண்டு.
சொல்லதனை எழுதுகோல்கள் மணந்து கொண்டால்
சுகமுள்ள கலப்புமணம்! கவிதை உண்டு.
நல்லாற்றை கழிவுநீர்தான் மணந்து கொண்டால்
நாட்டினிலே தூயதண்ணீர் எங்கும் இல்லை.

சேலையது வேட்டிதனை மணந்து கொண்டால்
சிறப்புதரும் கலப்புமணம்! துணியே உண்டு.
சோலையது மழைநீரை மணந்து கொண்டால்
சோர்வில்லாக் கலப்புமணம் ! குளிர்ச்சி உண்டு.
வேலையது வியர்வைதனை மணந்து கொண்டால்
விசைகொண்ட கலப்புமணம்! பணமே உண்டு.
சாலைமரத் தைகொடுவாள் மணந்து கொண்டால்
சாகும்வரை இம்மண்ணில் மழையே இல்லை.

# செந்தமிழ்

(தோற்றம் 1902)


தொகுதி : 102
பகுதி : 7
சூலை 2008

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2039




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

**தலைவர்**
மன்னர் **நா.குமரன் சேதுபதி**
இராமநாதபுரம்

**ஆசிரியர்**
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்


இதழ்மணம் 255

நூல் மதிப்புரை — திரு.இரா.அழகுமலை 256

திருக்குறளில் கருத்தியல் போர் 259
பேராசிரியர் கருவை பழனிசாமி

மரபுக்கவிதை, புதுக்கவிதைகளில் கண்கள் 266
ந.அருள்மொழி

திருக்குறள் போற்றி மாலை 272
முனைவர் பா.வளன் அரசு

இலக்குவனாரும், குறள் நெறியும் 277
முனைவர். நெல்லை ந.சொக்கலிங்கம்

அறிவியல் வளர்ச்சிக்கு
முன்னிருந்த வெண்ணியம் 284
முனைவர். சு.குழந்தைவேல் பன்னீர்செல்வம்

வாசகர் வாசகம் 291

# இதழ் மணம்

இன்றைய காலவளர்ச்சிக்கேற்ப பழமையும் புதுமையும் இணைந்த கலவையாய் ஜூலை, 2008 இதழ் வெளிவருகின்றது.

வேறுவேறு வகையைச் சார்ந்த பொருண்மைகள் இணைந்தே பலன் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. அதில் முரண்பட்ட பொருண்மை இணைந்தால் என்றுமே துன்பம்தான் நல்கும் என்ற உலக நடவடிக்கையை எடுத்துக்காட்டும் "கலப்புத்திருமணம்" என்ற மரபுக்கவிதை, சமுதாய நிகழ்வில் இருவேறு நிலைகளை உள்ளீடாகக் கொண்டு அமைந்துள்ளது.

பழமையான மரபுக்கவிதைக்கு என்றுமே மாறாத மதிப்புண்டு என்பதை வெளிப்படுத்தும் அனல்மூச்சு என்னும் மரபுக்கவிதையின் நூல் மதிப்புரை அமைந்துள்ளது.

பேரா.கருவை பழனிசாமியின் 'திருக்குறளில் கருத்தியல் போர்' என்னும் கட்டுரை இவ்விதழில் கருத்து நிறைவுடன் நிறைவுபெறுகிறது.

மனித வாழ்வின் முதன்மையான உறுப்பாக அமையும் கண்கள், பழமை மரபுக்கவிதையிலும் புதுமை புதுக்கவிதையிலும் சிறப்பிடம் பெற்றுள்ளதை வெளிப்படுத்தும் விரிவுரையாளர் B.அருள்மொழியின் கட்டுரை இதழை அழகு செய்துள்ளது.

எக்காலத்திற்கும் பொருந்தும் வாழ்க்கை நெறியை வெளிப்படுத்தும் தமிழர்களின் வேதநூலாம் திருக்குறளுக்கு முனைவர் பா.வளன் அரசு போற்றி மாலை படைத்து, இதழை மணக்கச் செய்துள்ளார்.

தமிழ்ச் சான்றோரின் சான்றாண்மையை வெளிப்படுத்தும் நம் செந்தமிழ் இதழை 'இலக்குவனாரும் குறள்நெறியும்' என்னும் கட்டுரை மேலும் சிறக்கச் செய்துள்ளது.

'பெண்மையைப் போற்றுதல் ஆண்மைக்கழகு' என்ற தற்கால உண்மையை உலகிற்கு உணர்த்தும் வண்ணமாக முனைவர். குழந்தைவேல் பன்னீர்செல்வம் 'அறிவியல் வளர்ச்சிக்கு முன்னிருந்த பெண்ணியம்' என்ற கட்டுரை வழங்கியுள்ளமை மகிழ்வளிக்கிறது.

இதழின் சீரிய பணியை ஆய்ந்து நடுவுநிலையுடன் பாராட்டி போற்றும் 'வாசகரின் வாசகம்' இதழ் இன்னும் சிறப்பாக வெளிவர தூண்டுகோலாக உள்ளமை பாராட்டிற்குரியது.

– ஆசிரியர்

# நூல் மதிப்புரை

*திரு.இரா.அழகுமலை*
செயலர், மதுரைத் தமிழ்ச் சங்கம்

நூலின் பெயர் – **அனல் மூச்சு**
நூல் ஆசிரியர் – கவிவேந்தர் கா. **வேழவேந்தன்**
வெளியீடு – வேந்தர் பதிப்பகம்
முதற்பதிப்பு – ஜூன், 2007.

இலக்கணச் செங்கோல், யாப்புச் சிம்மாசனம், எதுகைத்தேர், மோனைப் பல்லக்கு – இவையெல்லாம் கவிதைக்கு எதற்காக என்று வினா எழுப்பி, கவிதைகளுக்கு விதிமுறைகள் தேவையில்லை என்று விடையளித்து, புதுக்கவிதைகள் எழுதுகின்ற காலம் இது. புதுக்கவிதை மோகத்தில் மூழ்கியிருக்கும் இக்காலக்கட்டத்தில்,

***" உருப்படியாய் உன்கவிதை நிலைக்க வேண்டின்***
***ஒயில்மரபில் எழுதிடு நீ! அதுதான் வாழும்"***

என்று குரல் எழுப்புகின்றார், கவிஞர் கா. வேழவேந்தன். 'வேழவேந்தன் கவிதைகள்' , 'வண்ணத்தோகை' போன்ற எண்ணற்ற கவிதைப் படைப்புக்களைத் தந்த அக்கவியுள்ளம் 'அனல் மூச்சு' என்ற கவிதைத் தொகுப்பையும் படைத்துள்ளது. 'ஒரு காலத்தில் வண்ணத்தோகை' போன்ற வனப்பு மிகு வருணனைக் கவிதைத் தொகுப்புகள் எழுதிய நான் என் கொதிப்புணர்வுகளைக் கொட்டித் தீர்க்க இந்த நூலை ஆக்கியிருக்கிறேன்' என்கிறார் கவிஞர். (நூலாசிரியர் பேசுகிறேன். ப.55) அனல் தெறிக்கும் தம் கருத்துக்களைச் சொல்வதற்கு, காலச் சூழலுக்கு ஏற்ற பாவகையாக விருத்தப்பாவைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

இந்நூல் 256 பக்கங்களைக் கொண்டதாய் உள்ளது. பொருளடக்கத்தில் 96 தலைப்புக்களைக் காண முடிகிறது. தமிழக

முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முன்னுரை தொடங்கி நூலாசிரியர் பேசுகிறேன் (1–7) வரை உள்ளவை நூலைப் பற்றியும் நூல் ஆசிரியரைப் பற்றியும் செய்திகளை அள்ளித் தருகின்றன. 8 முதல் 96 வரை உள்ள 89 கவிதைகள் கவிஞரின் எரிமலை நெஞ்சத்திலிருந்து புறப்பட்ட நெருப்புக் கவிதைகள் ஆகும். இவற்றுள் பரிசு பெற்ற கவிதைகளையும் காணமுடிகிறது. எ.கா.'புதுயுகத் தமிழர்' (இலண்டன் சுடரொளி இலக்கியக் கழகம் நடத்திய உலகத்தமிழ்க் கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கவிதை)

தமிழ்மொழி, தமிழர், தமிழிலக்கியங்கள், தமிழ்ப்புலவர்கள், இந்தியக்கவிஞர், திராவிட இயக்கத் தலைவர்கள், சமயத்தலைவர்கள், கவிதை மாண்பு, மனிதம், தாய்மை, இயற்கை, அறிவியல் என்பனவற்றைத் தம் கவிதைக்குரிய பொருளாக்கிப் பாடுகிறார். இக்கவிதைகளில் எல்லாம் அவருடைய மொழி உணர்வும், இன உணர்வும், சமுதாய உணர்வும் பீறிட்டு வருவதைக் காண முடிகிறது.

*" உலகமதில் சப்பானும் செருமன் நாடும்*
*ஒப்பரிய முன்னேற்றம் காண்பதேன்? ஏன்?*
*துலங்குகின்ற தாய்மொழியின் வழியில் கல்வி*
*தொடக்கமுதல் இறுதிவரை கற்ப தால் தான்!"*

(தாய்த் தமிழைச் சேய்கள் மறந்ததேன், ப.66) என்று செம்மொழியாய் நம்மொழியை அறிவித்தாலும், தாய்மொழி வழியில் கல்வியை நாம் மறந்ததாலே நாம் ஒப்பரிய முன்னேற்றம் காணாமல் இருக்கிறோம் என்கிறார்.

*" பள்ளியில்தான் ஆசிரியர் உள்ளார் என்றே*
*பார்க்காதே, என் தோழா! அதோ பார் ;*
..............................................................
*தன் கடமை தவறாமல் நடக்கும் 'ஆறோ'*

*நடம் உணர்த்தும் பேராசான் என்பேன் வீசும்*
*'மென்தென்றல்' ஓர் ஆசான்; தேடி வந்து*
*மேனிக்கே மகிழ்வூட்டும் தொண்டைக்கூறும்!*

*வன்னெஞ்சர் வாளாலே வெட்டினாலும்*
*மாளும்வரை நிழல்தந்த குளிர்ச்சி நல்கும்*
*'நன்மரம்' ஓர் நல்லாசான்! காட்டுத் தேனீ*
*நமக்கெல்லாம் சேமிப்பை உணர்த்தும் ஆசான்!"*

(எத்தனை ஆசிரியர், பக்.77–78) என்று உலகமெங்கும் பல்வேறு ஆசிரியர் உள்ளார் என்கிறார், கவிஞர்.

*"சுறுசுறுப்பைக் கூட்டுங்கள்; வெற்றி கிட்டும்!*
*சோம்பலினைக் கழியுங்கள்; நலங்கள் கிட்டும்!*
*திறமையினைப் பெருக்குங்கள்; பெருமை கிட்டும்!*
*செயல்முறையை வகுத்திடுங்கள்; செழுமை கிட்டும்!*
*அறநெறியைக் கூட்டுங்கள்; அமைதி கிட்டும்!*
*அழுக்காற்றைக் கழியுங்கள்; அன்பு கிட்டும்!*
*சிறப்புக்களைப் பெருக்குங்கள்; மேன்மை கிட்டும்!*
*சீர்த்திட்டம் வகுத்திடுங்கள்; உயர்வு கிட்டும்!"*

(வாழ்க்கைக் கணக்கு, ப.253) என்று நல்வாழ்விற்கு நற்பாதை வகுத்துக் காட்டுகிறார்.

காலந்தோறும் கவிதைகளும், காவியங்களும் படைக்கப்பட்டு வருவதைக் காண்கிறோம். இவ்வுலகில் கடைசி மனிதன் உள்ளவரை கவிதையும் நிலைத்து இருக்கும். காலத்தால் அழியாத கவிதைகள் முருகியல் இன்பம் நல்குவதோடு, வாழ்விற்கு நல் மருந்தாகவும் விளங்குகின்றன. திறவாத நெஞ்சைத் திறக்கும் திறவுகோல்களாகத் திகழ்கின்றன.

*"கொள்ளை இன்பக் கவிதைகள் அள்ளி அள்ளிக்*
*கொடுக்கின்ற கவிஞர்கட்கே மரணம் ஏது!"*.

# திருக்குறளில் கருத்தியல் போர்

– சென்ற இதழ் தொடர்ச்சி

*பேராசிரியர் கருவை பழனிசாமி*

'இகல்கருதி இன்னாசெய்யாமை தலை' என்று கூறுவதும் பொறுமையின் கூறுதான். பகையையும் நட்பையும் வகைவகையாகப் பிரித்ததைப்போல பொறுமையையும் வகைவகையாகப் பிரித்துப் பார்க்க வேண்டும். 'இளைதாக முள்மரம் கொல்க', 'கரும்புபோல் கொல்லப் பயன்படும்கீழ்', 'பைங்கூழ் களைகட்டதனோடுநேர்' என்ற இடங்களை ஒத்துக்காண்பதன் மூலம் பொறுமையின் எல்லைக்கோடுகளை அறிய முடியும். "இன்னாதம்ம இவ்வுலகம். இனிய காண்க அதன் இயல்புணர்ந்தோரே!" (புறநானூறு) என்ற கோட்பாட்டின் விரிவாக்கம் தான் திருக்குறள் காட்டும் பொறுமையின் விளிம்பு; எல்லாம் சிலகாலம் என்ற பொதுவான தத்துவநோக்கிலிருந்து முற்றாக விலகாமல் சற்றே விலகிச்செல்வது திருக்குறள்; நிலையாமைத்தத்துவம் உண்டு என்றாலும் நிலையான புகழுக்கும் இடம் உண்டு என்ற கோட்பாடு ஓங்கியுள்ள தொருகாலத்தைக் காட்டுவது திருக்குறள்.

'நெருநல்உளனொருவன் இன்றில்லை' என்னும் பெருமை கொண்டிருந்தாலும் 'உளதாகும் சாக்காடு வித்தகர்க்கு எளிது' என்ற கோட்பாடு நிலவியகாலம் திருக்குறள் தோன்றியகாலம்.

நிலையாமைத்தத்துவத்தை ஒரோவழி உடன்பட்டாலும் கேடில்விழுச்செல்வம் உண்டு என்ற கருத்தியலை வலுவாக்கி நிலைநாட்டிடமுற்பட்டது திருக்குறள்; அவா அறுத்தலையும் இடுக்கணழியாமையையும் ஒருங்கிணைத்த கூட்டுச் சிந்தனைக்கு இடமளித்தது குறள்; வறுமையின் கொடுமைக்கு இடமளிக்காத வழிவகைகளை அடையாளம் காட்டியுள்ளது திருக்குறள். பொதுவாக ஈகை என்பது வறுமை ஒழிப்புக்கான ஒருவழி; அது ஒன்றே வழியாக இருக்கக்கூடாது. வறியார்க்கு ஒன்று ஈவது ஈகை என்பது ஆணித்தரமான

கூற்று; ஈகை அதிகாரம் முழுக்க முழுக்க வறுமைக்கு எதிரான குரல் ஓங்கி ஒலிக்கும்; ஆள்வினை உடைமை என்ற அதிகாரமும் வறுமைக்கு எதிரான போர்க்குரல் முயற்சி என்பதும், தாளாண்மை என்பதும் முற்றாக வறுமையை ஒழித்துக் காட்டும் செயல்திட்டங்களாகும். அதன் சிகரமாக 'மடியிலான் தான் உளாள் தாமரையினாள்' என்று புனைந்துரைப்பதும் வறுமைக்குத் தடை எழுப்பும் ஓர் உத்தி; திருமகள் என்றழைக்கப்படும் புராணக்கடவுள், முயற்சி செய்யக்கூடிய மடியிலான் காலடியில் கொலுவிருப்பாள் என்பது தொன்மப்படிமமாக வறுமைக்கு எதிராகத் தீர்மானிப்பதையே குறள் ஆணித்தரமாக எடுத்துக்காட்டுகிறது. வாரிசுஉரிமைப்படி சொத்துசுகம் வருவது தெய்வீகமானதாக நம்புகிறமக்களைத் தட்டி எழுப்பி விழிப்பூட்டிக் கடும் உழைப்பில் திளைப்பது போதுமான கூலிகிடைக்கும் என்ற புதிய நம்பிக்கை ஒளி ஏற்படுத்துவது குறள்நெறி.

நிறைவாக உழவுத்தொழில் மூலம் இன்மை ஒழியும் என்று ஆணித்தரமாக வறுமை ஒழிய வழிகாட்டியுள்ளது குறள். இலம் என்று அசைஇ இருப்பாரை, பூமாதேவி எள்ளிநகைத்துப்பரிகாசம் செய்வதாகப் புனைந்துரைப்பது குறள். வறுமைக்குக் கையேந்திப் பிச்சையெடுப்பது ஒருவழியாகாது என்பதற்கு ஒரு தனி அதிகாரம் அமைத்தார். அதற்கு, இரவச்சம் என்ற தலைப்பிட்டு வாதாடுவது இரவாமையைப் போற்றுவதற்குத்தானே தவிர வறுமைக்கு எதிராகப் பிச்சை எடுப்பதைப் போற்றுவதாகாது. கயமையை எதிர்த்துப் போராடுவதும் வறுமையை ஒழிக்கப்போராடுவதும் திருக்குறளின் எதிர்நீச்சலாகும். பகையை வகைப்படுத்தி எதிர்க்க போர்க்கால நடவடிக்கைகளை வகைப்படுத்திக் காட்டுவதைப்போலவே புல்லறிவாண்மையையும், பேதைமையையும் அடியோடு களைவதற்கும் முறியடிப்பதற்கும் மேற்கொண்டுள்ள போர்க்கால நடவடிக்கைகளை அடுத்தடுத்து முறைப்படுத்தியுள்ள களங்களே கல்வி, கேள்வி, கல்லாமை, அறிவுடைமை, குற்றங்கடிதல், காலமறிதல், இடனறிதல், வலியறிதல், அவையறிதல், அவையஞ்சாமை, சொல்வன்மை முதலிய அதிகாரங்கள்.

"உற்றுழிஉதவியும் உறுபொருள்கொடுத்தும் பிற்றை நிலைமுனியாது கற்றல்நன்றே" என்று புறநானூற்றில் பாண்டியன் நெடுஞ்செழியன் முழங்கியுள்ளது கவிதை மட்டுமா? அது சட்டம்! "வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும் கீழ்ப்பாலொருவன் கற்பின் மேற்பாலொருவனும் அவன் கண்படுமே! ஒருதாய் வயிற்றில் பிறந்தோராயினும் மூத்தோன் வருக என்னாது அவருள் அறிவுடையோனாறு அரசும் செல்லும்" அதனால் கற்றல் நன்றே என்ற முழக்கம் திருக்குறளில் எதிரொலிப்பது வரலாற்றுக்கட்டாயம். சமூக அநீதிக்கு எதிரான போர் முழக்கங்களே வள்ளுவரின் கல்வி சார்ந்த அதிகாரங்கள்!

வறுமைக்கும் கயமைக்கும் எதிராகக் கிளர்ச்சிசெய்யும் போர்க்களமே குறள் அதிகாரங்களின் அணிவகுப்பு. வறுமைக் கோட்டினையும் கயமைக் கோட்டினையும் சாடுவதற்காகவே பாடுவதாகவும் பாடுபடுவதாகவுமே குறளதிகாரங்களை, கொடியணிவகுப்பு நடத்திக் காட்டுகிறார் திருவள்ளுவர்.

கல்வி, கேள்வி, அறிவுடைமையாகிய அரண்களை முன்வைத்து; செங்கோன்மை, கண்ணோட்டம், நட்பு ஆகிய கோட்டைநிறுவி; ஊக்கமுடைமை, ஆள்வினையுடைமை ஆகிய முரசொலித்து; படையெடுத்து; பேதைமை புல்லறிவாண்மை, கள், சூது, களவு, பகைமை, உள்ளும் புறமும் அழித்து; மானம், பெருமை, சான்றாண்மையாம், கொடியேற்றி; பண்புடைமையாம் வெற்றி விழா எடுப்பதுதான் திருக்குறள் எனும் இலக்கு எல்லை. இதற்கு உறுதுணையாக எழுப்பப்படும் பாசறைப் பயிற்சிகளே வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினை செயல்வகை, இடுக்கணழியாமை, மடியின்மை, பொச்சாவாமை ஆகிய குறளதிகாரங்கள். எல்லாம் சிலகாலம் என்பது ஒரு கோட்பாடு; அது குறளுக்குப் பொருந்தாது; குறள் எல்லாக் காலத்துக்கும் பொருந்தி வரக்கூடியது. எனவே ஒரு சில எல்லாக் காலத்திற்கும் பொருந்தக்கூடியவை; அவற்றுள் சந்திரனும், சூரியனும், காற்றும் கடலும் நிலமும் உள்ளிட்ட மொழியும் தமிழும் தமிழில் உள்ள குறளும் எல்லாக் காலத்திற்கும் பொருந்தும்.

''என்று முள தென்தமிழ்'' என்ற தொடரில் 'என்று முளகுறள்' என்ற பொருளும் உண்டு. எனவே எல்லாம் சில காலம் என்று கூறாமல் எல்லாம் என்றும் உண்டு என்று கூறாமல் ஒரு சிலவே எல்லாக்காலத்தும் உண்டு என்று கூறுவதே சரி. திருக்குறளில் வள்ளுவர் கையாண்டுள்ள உத்திகளுள், குறிப்பும் வெளிப்படையும் நூல் முற்றும் இடம் பெற்றுள்ளன; கயமை என்ற தனி அதிகாரம், கயவர்யார் ? எத்தகையவர் என்று குறிப்பாக உணர்த்தும் முயற்சியில் நிறைவு காணாதவர் வள்ளுவர்.

*கயவர் மக்களே போல்வர்*
*கயவர் திருவுடையர்*
*கயவர் தேவர் அனையர்*

என்றெல்லாம் புனைந்துரையாகச் சொல்லிவைத்தார்; அதெல்லாம் போதாதென்று அவர்களின் செயல்பாடுகளுக்கு எல்லைக் கோடாக அவா முதலிய செயல்கள் மூலம் காட்டுவதுடன், சொற்களில் வரையறை செய்யவே முடியாதென்பதால் உடல் மொழி மூலம் கயவரை அடையாளம் காட்டுகிறார். உடல்மொழியும் செய்கைமொழியும் குறிப்பாகவே உணர்த்தும் என்றாலும் ஆணித்தரமான மேற்கோள் காட்டுகிறார்; அந்தவகையில் குறிப்பும் வெளிப்படையும் கலந்த நயம் தெரிகிறது. 'மெலியார்க்கு யாதும் கொடார், நலிப்பார்க்கு எல்லாம் கொடுப்பர் என்று வரையறுப்பதற்கு, 'கொடிறுடைக்கும் கூன்கையர் அல்லாதவர்க்குக் கொடுக்கமாட்டார்' என்று கூறாமல் 'கொடிறுடைக்கும் கூன்கையருக்கே கொடுப்பர்' என்று கூறுவதன் மூலம் ஓர் உடல் மொழியைப் பயன்படுத்துவதிலும் கயவர் இப்படி வெளிப்படுகிறார்; தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் கொடுக்கப்படும் என்பதற்கெல்லாம் இடம் தராத உயரத்தில் இருப்பவர் கயவர்; மயிலேமயிலே என்றால் இறகு போடாத மயிலைப் போன்றவர்.அடிமேல் அடிவைத்தால்தான் நகரும் அம்மிக்கல்லைப் போன்றவர்; இதற்கெல்லாம் மேலே போய், கயவர் வலியவர்களால் நையநெருக்கினால் தான், தன் வசம் உள்ள மிகுதியான உபரியைத்தந்து உதவமுன்வருவார் என்பதற்கு கரும்பைச்சாறு பிழியும் செயலை உதாரணம் காட்டுவதும் உடல் மொழிதான். கயமை என்பதற்குத்திட்பநுட்பமான வரையறை காண்பதன் மூலம் அதன்

பரிமாணங்களையும் கண்டுணர இயலும். சான்றாண்மை என்பதனுள் அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை ஆகிய அய்ந்தும் உள்ளடக்கம் ஆவது போல் கயமைக்குள்ளும் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகியன உள்ளடங்கும் என்பதைப் பின்வரும் சான்றாதாரங்களால் அறியமுடியகிறது.

1. *“உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின்பிறர்மேல் வடுக்காண*
*வற்றாகும் கீழ்”* (1079)

பொறாமையுடன் புறங்கூறலும் உள்ளிட்ட செயல்பாட்டில் திளைப்பவரே கீழ் (கயவர்) என்பது இக்குறள் காட்டும் செய்தி.

2. *“அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம் அவா*
*உண்டேல் உண்டாம் சிறிது”* (1075)

3. *“எற்றிற்குரியர் கயவர் ஒன்றுற்றக் கால்*
*விற்றற் குரியர் விரைந்து”* (1080)

தேசவிரோதம் மற்றும் தேசத்துரோகம் என்பதெல்லாம் அச்சத்தாலும் ஆசையாலும் தம் தேவைகளை ஈடு செய்துகொள்ளும் இழி செயல்களையே காட்டுவதாலும் கயமையின் இலக்குஎல்லை வெளிப்படும். பிறர் நாணத்தக்கது தான் நாணானாயின் அறம் நாணத்தக்கதுடைத்து (1018) என்பதோடு பின்வரும் இரு குறள் கருத்தை இணைத்துக்காண்பதால் ஒருண்மை வெளிப்படும். “நன்றறிவாரில் கயவர் திருவுடையர் நெஞ்சத்து அவலம் இலர்” (1072) “தேவர் அனையர்கயவர் அவரும் தாம் மேவன செய்தொழுகலான்” (1073)

ஒப்புரவு, கண்ணோட்டம், அன்பு, நாண், வாய்மை என்பவற்றுள் ஏதும் இல்லாத செயல்பாடுகளே கயவர்மேற்கொள்வன என்பன தெரிகிறது. ‘ஈங்கை விதிரார்கயவர்’ என்பது ஒருபழமொழியை ஒத்தது. ‘எச்சில்கையால் காக்கை ஒட்டாதவர்தாம் கயவர்’ என்பதுதான் ‘ஈங்கை விதிரார் கயவர்’ என்பதால் தெரிகிறது.

'சொல்லப் பயன்படுவர் சான்றோர் சொல்லப் பயன்படாதவர் கயவர்', 'அறைபறை அன்னர் கயவர்' என்பதும்; பயனில சொல்பாராட்டுவானை மக்கட்பதடி எனல் என்பதும் அறிவென்னும் உள்ளீடற்றவரையே காட்டும். கயவரது செறிவின்மையைக் காட்டுவதாக உணரலாம். அரசர், அமைச்சர், ஒற்றர், தூதுவர், படைவீரர், அவையில் இடம் பெறக்கூடிய சொல்லேருழவர் ஆகிய புலவர் ஆகிய பொதுப்பணி மேற்கொண்டோருக்குச் சிறப்பாகக் கூறப்பட்ட குணங்கள் குறிப்பாக யாவருக்கும் பொருந்தும். ஒழியியலுள் வெளிப்படக் கூறியனவுமாய குணங்களும் இல்லாத கீழோர் தாம் கயவர். இவரும் இடம் பெறலாம் என்பதை உணர்த்தவே இக்கயமை எல்லாவற்றிற்கும் பின்வைக்கப்பட்டது.

நல்குரவு, கயமை என்னும் இரண்டு சொல்லாட்சிகளும் பெருவழக்குப் பெறாதன. எனவே இவ்விருகூறுகளும் மிக மிக அருகியே காணப்படும். இவை பெருகிவிடு மானால் சமூகச் சீரழிவுதான் என்பது குறிப்பு. எனவே இரண்டினையும் கட்டுப்பாட்டில் வைக்கவேண்டும்; கயமை என்பதன் பரிமாணங்களை ஓரதிகாரத்தில் அடக்கிக்கூறும் முயற்சியை அறியவேண்டும், புறங்கூறுதல் பொறாமைப்படுதல் கூடாவொழுக்கம் ஆகிய பரிமாணங்களைக் கொண்டதே கயமை. முறுக்கியகைகொண்டு கன்னத்தை அறைந்து பல் உடைபடுபவரையும், ஆலையில் பிழிபடும் கரும்பையும் காட்டுவது உடல் மொழியாகும்.

விற்றுக்கொள்ளத்தக்கது ஒப்புரவறிதல், விற்றுக்கொள்ள வேண்டாதது கயமை என்று சுட்டும் போது கயமையின் இலக்கு எல்லை தெரிகிறது.

தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் கொடுக்கப்படும் – இந்த இருபண்பாடு இல்லையானால் கயமை தட்டினாலும் திறப்பதில்லை கேட்டாலும் கொடுப்பதில்லை வசதிபடைத்தவன் தரமாட்டான் வயிறு

கேட்டாலும் கொடுப்பதில்லை வசதிபடைத்தவன் தரமாட்டான் வயிறு பசித்தவன் விடமாட்டான்; எனவே ஈர்ங்கை விதிராதவரின் கொடிறுடைக்க கூன்கைக்கு வேலைதர வேண்டுவது கயமையாகக் கருதுகிறார் வள்ளுவர்; பாரதத்துப்போர் என்ன கருத்தில் நிகழ்ந்தது?

சூதாடுவது கயமைக்கு வழிவகுப்பது; பாண்டவர் தம்மை விற்றுத்திரவ்பதியை விற்றது, ஒன்றுற்றக்கால் விற்றற்குரியர்விரைந்து என்பது; அக்கயமை உடுப்பது உண்பதும் கண்டு பிறர் மேல் வடுக்காணவல்லது கயமை; சொன்னாலும் கேளாமல் போருக்கு இடமளித்துக் கரும்புபோல் நெருக்கியதும் பிழிப்பட்டுப் பயன்படுவார் கயவர்.

வரைவில் மகளிருடன் உறவாடுவது கயமை; தாலிகட்டியவளுக்கு அஞ்சி நடப்பது கயமை. அறவினையும் ஆன்றபொருளும் பிறவினையும் (இன்பமும்) பெண் ஏவல் செய்வாரிடம் இல்லை; அது போலவே இருமனப்பெண்டிரும் கள்ளும் சூதும் திருநீக்கப்பட்டவர் தொடர்பு; கயவர் திருவுடையர் என்று இகழ்ந்தது குறிப்பாக வெளியானதொரு செய்தி; பழிபாவங்களுக்கு அஞ்சாமல் கவலையற்று, தேவரைப்போல தாம் விரும்புவனவற்றைச் செய்வது கயமை. கூடாவொழுக்கத்திலும் கூடாநட்பு, தீநட்பு, களவு எல்லாமே கயவர் செய்கைகள்.

வினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பு கனவிலும் கூடாது என்பது குறள்,சொல்வணக்கம் ஒன்னார்கண்கொள்ளற்க; கணை கொடிது என்பதும் அதனால்தான்; வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் கயமை என்று தீர்மானித்தார் வள்ளுவர், கயமைக்கும், வறுமைக்கும் எதிராகப் போர்முழக்கிப் படையெடுப்பது திருக்குறளின் கருதுகோள் அதுவே தீமைக்கு எதிரான போர்ப்பணி.

●❈❈●❈❈●

# மரபுக்கவிதை, புதுக்கவிதைகளில் கண்கள்

*ந.அருள்மொழி*
தமிழ்த்துறை விரிவுரையாளர்
அய்யநாடார்–ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி.

## முன்னுரை

இலக்கியப் படைப்புகளுள் ஆற்றல் மிகுந்த படைப்பாகத் திகழ்பவை கவிதைகள். இக்கவிதைகளில் 'கண்கள்' குறித்த செய்திகள் பதிவாகியுள்ளன. மரபுக்கவிதைகள் இலக்கண மரபுகளுடனும் புதுக்கவிதைகள் இலக்கணமரபை மீறிச் சாதாரண வழக்குச் சொற்களுடனும் அமைந்துள்ளன. புதுக்கவிதைக்கு முன்னோடியாகவும் வித்தாகவும் இருப்பவை மரபுக்கவிதைகள். இவ்விருவகைக் கவிதைகளிலும் கண்கள் இடம் பெற்றுள்ளன. இக்கவிதைகளில் கண்களை வருணிக்கும் முறை, எடுத்தாளும் முறை ஆகியவற்றில் ஒற்றுமை, வேற்றுமைக் கூறுகள் இருப்பதை எட்டுத்தொகை அகநூல்கள் ஐந்தின் வழியும் புதுக்கவிதைகள் இருபத்தைந்தின் வழியும் ஆய்ந்தறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பாடும் முறை

மரபு, புதுக்கவிதைகளில் கண்களைப் பாடும் முறை வேறுபடுகின்றன. மரபுக்கவிதைகளில் கண்கள் பாடுபொருளாக அமையவில்லை. ஆனால், பாடலின் போக்கில் வருணனைக்கும் மாந்தர் மன உணர்வை வெளிப்படுத்தற்கும் கண்கள் பயன்பட்டுள்ளன. இதனை,

*'குன்றநாடன் குன்றத்துக் கவாஅன்*
*பைஞ்சுனைப் பூத்த மகுவாய்க் குவளையும்*
*அம்சில் ஓதி அசைநடைக் கொடிச்சி*
*கண்போல் மலர்தலும் அரிது"*

– (ஐங்குறுநூறு, பாடல் எண்: 298) என்ற பாடல் அடிகளில் காணமுடிகிறது.

புதுக்கவிதையிலோ கண்கள் பாடுபொருளாக அமைந்துள்ளன. மேலும் வருணனைக்கும் நடப்பியலைக் கூறுவதற்கும் கண்களைப் பாடுபொருளாக்கியுள்ளனர்.

*'சூழ்நிலைப் பாலையில்.*
*வாழ்க்கை வெயிலின்*
*சுற்றித் திரியும்*
*என் கண்களுக்கு*
*குளுகுளு ஒயஸிஸ்*
*ஆயின அன்பே*
*உன்னிரு விழிகள்'*

(புதுக்குரல் (தொகுப்பு), வல்லிக்கண்ணன், ப.108)

**வருணிக்கும் முறை**

சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தியமையால் கண்களைக் குவளைமலர், தாமரைமலர், நீலமலர், கருவிளமலர், கெண்டைமீன், கயல்மீன், மான்விழி, மாவடு ஆகியவற்றோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளனர். மேலும் அக்காலத்தில் போருக்குப் பயன்படுத்திய கருவிகளான வேல், வாள், அம்பு போன்று கண்கள் ஒளிபொருந்தியதாகவும் கூர்மையுடையதாகவும் இருந்ததால் அவற்றோடும் கண்களை ஒப்பிட்டுள்ளனர்.

*'இளமாங்காய் போழ்ந்தன்ன கண்ணினால் என்நெஞ்சம்*
*களமாக் கொண்டு ஆண்டாய்'* - (முல்லைக்கலி, பாடல் எண்–8)

மரபுக்கவிதைகள் போன்று புதுக்கவிதைகள் கண்களைக் கெண்டைவிழி, வாள்விழி, வேல்விழி எனச் சிறுபான்மையாக வருணித்துள்ளன. இன்றைய உலகம் அறிவியல் உலகம் என்பதால் காலத்திற்கேற்ப கண்களை வருணிப்பதிலும் அறிவியல் சொற்களைக் கையாண்டுள்ளனர். கேமராக்கண்கள், எக்ஸ்ரே விழிகள், பைனாக்குலர் கண்கள் இவையெல்லாம் புதுக்கவிதையில் கண்களுக்கு அடைமொழியாகியுள்ளன.

*"பூமியெங்கும் உலாவுகிற*
*உமது கேமராக் கண்கள்"*

(ஒளியின் ஓசை, ஜான்சுந்தர் தாஸன், ப.32)

*"உன்*
*எக்ஸ்ரே விழிகளைக் கொஞ்சம்*
*என்னை விட்டுத் திருப்பு*
*அவைகள் என்னை வென்றன".*

(ஒளியன் ஓசை, ஜான்சுந்தர் தாஸன், ப.33)

மரபு, புதுக்கவிதைகளில் கண்களை வருணிப்பதில் அழகுணர்ச்சி மிகுதியாக் உள்ளது.

*" வண்டுவாய் திறந்த வாங்குகழி நெய்தல்*
*போதுபுறங் கொடுத்த உண்கண்"*

(அகநானூறு, பாடல்–130)

இப்பாடல் அடிகளில் தலைவியின் கண்களைக் கண்டு நெய்தல் மலர் புறங்கொடுப்பதை அறிய முடிகின்றது.

*" விழிகளுக்கு*
*நேராய்*
*எந்த*
*நட்சத்திரமுமில்லை"*

(ஓடும் மரங்கள், மாவேந்தன், ப.43)

என்ற புதுக்கவிதை ஒளிவீசக்கூடிய நட்சத்திரமும் கண்களின் முன் எதிர்நிற்க முடியாது என்பதை அழகுணர்ச்சியோடு கட்டுகின்றது.

**சூழல் வெளிப்பாடு**

மரபு, புதுக்கவிதைகள் சூழல் வெளிப்பாட்டினைத் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன. மரபுக் கவிதைகள் இன்ப, துன்பச் சூழலைக் கண்கள் வழிப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

தலைவனின் பிரிவில் தலைவியின் கண்கள் துன்ப உணர்வுடன் காணப்பட்டன. ஆனால் தலைவன் உடனுறைந்தபோது தலைவியின் கண்கள் இன்ப உணர்வுடன் திகழ்ந்தன.

தலைவன் களவில் வரைவிடை வைத்துப் பிரிந்த போதும் இரவுக்குறி, பகற்குறியில் இன்பம் துய்த்துப் பிரிந்த போதும் தலைவியின் கண்கள் அழகிழந்தும் கண்ணீர் சிந்தியும் துயிலாது வருந்தியும் வருத்தத்தை வெளிப்படுத்தின. இதுபோல் கற்பில் ஊடலின் போதும், பொருளீட்டப் பிரிந்தபோதும் தலைவியின் கண்கள் துன்பத்தின் குறியீடாகவே கட்டப்பட்டிருக்கின்றன.

*'........................... மாமைத்*
*தகைவனப்பு இறந்த கண்ணும்'*

*(அகநானூறு, பாடல் எண்.69)*

*'மலரோ உண்கண் பனிவர'*

*(நற்றிணை, பாடல் எண்.308)*

*'வருதும் என்ற நாளும் பொய்த்தன*
*அரியேர் உண்கண் நீரும் நில்லா'* -(அகநானூறு, பாடல் எண்.144)

தலைவன் வரவால் தலைவியின் உள்ளம் உவகை அடைகின்றது. இதனால் அழகிழந்த தலைவியின் கண்களும் பொலிவுற்றன. கொன்றைப் பூப்போன்ற தலைவியின் பசந்த மையுண்ட கண்கள் தலைவன் வரவால் குவளை மலர் போல அழகு பெறுகின்றன. இச்செய்தியை,

*'கொன்றைப் பூவின் பசந்த உண்கண்*
*குன்றக நெடுஞ்சுனை குவளைபோலத்*
*தொல்கவின் பெற்றன'*

(ஐங்குறுநூறு, பாடல் எண் – 500)

வறுமைச்சூழல், வேலைவாய்ப்பில்லாச் சூழல் போன்றவற்றைப் புதுக்கவிதை கண்கள் வழிவிளக்குகின்றது.

*'எங்களின்*
*கண்களுக்குள்ளேயே*
*நாங்கள்*
*முத்துக் குளித்துக்*
*கொண்டிருக்கின்றோம்.*

(கவிதன், விசாரணைக்கு வந்த வழக்குகள், ப.32)

என்ற கவிதையில் கண்களுக்குள் முத்துக்குளித்தல் என்பது வறுமையைச் சித்தரிக்கின்றது.

இன்றைய சூழலில் அரசாங்க வேலை என்பது கையகப்படாத காற்றைப்போல இருக்கின்றது. வேலை கிடைக்காத வேதனையில் இளைஞர்களின் கண்களும் ஒளி இழந்த தன்மையை,

*'எம்ப்ளாய்மெண்ட் அட்டையில்*
*புதுப்பிக்கும் தேதி*
*தேடித் தேடியே*
*கண்களின் வெளிச்சம்*
*கரைந்து விட்டதா?'*

(வைரமுத்து, கொடிமரத்தின் வேர்கள்)

என்ற கவிதை விளக்குகின்றது. இக்கவிதையில் 'கண்களின் வெளிச்சம் கரைதல்' என்ற தொடர் இளைஞர்கள் நம்பிக்கை இழத்தலைக் குறிப்பாகப் புலப்படுத்துகின்றது.

**சொல்லாட்சி**

மரபுக் கவிதைகளும் புதுக்கவிதைகளும் வெவ்வேறு கால கட்டங்களில் தோன்றியவை. மரபுக்கவிதை இலக்கணத்துடனும் புதுக்கவிதை இலக்கண மீறலுடனும் அமைந்திருப்பதால் இரண்டின் சொல்லாட்சியும் வேறுபடுகின்றன.

மரபுக் கவிதைகள் கண்களின் கூர்மையைக் குறித்திட வேல், வாள், அம்பு முதலிய சொற்களைக் கையாளுகின்றன.

*'பச்சூன் பெய்த பகழி போலச்*
*சேயரி பரந்த மாஇதழ் மழைக்கண்'*

(நற்றிணை, பாடல் எண்–75)

புதுக்கவிதை கண்களின் கூர்மையினை ஆழம் துழாவும் பார்வை என்ற சொல்லால் குறிப்பிடுகின்றது.

*'ஆழம் துழாவும்*
*உன் பார்வையால்*
*என் ஆண்மையின்*
*ஆணிவேரை அசைத்து விடாதே'*

(வைரமுத்து, கொடி மரத்தின் வேர்கள்)

பெண்களின் கண்கள் அழகுடனும் களிப்புடனும் திகழ்வதை மரபுக்கவிதைகளும் புதுக்கவிதைகளும் வெவ்வேறு சொற்களால் குறிப்பிடுகின்றன.

*'மேவல் தண்டா மகிழ்நோக்கு உண்கண்'*

(அகநானூறு, பாடல் எண்–29)

*'உன் விழிகள் தேன் குளங்கள்'*

(வைரமுத்து, திருத்தி எழுதிய தீர்ப்புகள்)

மரபுக்கவிதையில் கண்களைக் குறித்திடத் தூய தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். ஆனால், புதுக்கவிதையில் ஆங்கிலச் சொற்களைக் கையாண்டுள்ளனர்.

*'பொன் எனப் பசந்த கண் போதுஎழில் நலம் செலத்*
*தொல் நலம் இழந்த கண்'*

(மருதக்கலி, பாடல் எண்–12)

*'உன்*
*பைனாக்குலர் கண்களால் பார்'*

(ஜான்சுந்தர் தாஸன், ஒளியின் ஓசை)

மரபு, புதுக்கவிதைகள் கண்கள் வழியாக மெய்ப்பாடுகளை உணர்த்தியிருக்கின்றன. மெய்ப்பாடுகளை உணர்த்திட இரு கவிதைகளும் சொற்களில் மாறுபடுகின்றனவே தவிர, பொருளில் மாறுபடவில்லை.

*'........................ குவளை*
*நீர் சூழ் மாமலர் அன்ன கண் அழ'*

(நற்றிணை, பாடல் எண்–37)

*"கண்ணகி*
*என்று பெயரிட்டதால் தானா*
*அந்தக் கண்கள்*
*அழுதுகொண்டே இருந்தன?"*

(மேத்தா, ஊர்வலம்)

மேற்கூறப்பெற்ற மரபுக்கவிதையும் புதுக்கவிதையும் 'அழுகை' என்ற மெய்ப்பாட்டினை உணர்த்துகின்றன.

**முடிவுரை**

மரபு, புதுக்கவிதைகளில் 'கண்கள்' குறித்த ஒப்பீடு காலச்சூழலுக்கேற்பப் பாடும் முறையாலும் வடிவ அமைப்பாலும் சொல்லாட்சியாலும் மாறுபடுகின்றன. ஆனால் உணர்ச்சியை வெளிப்படுத்துவதிலும் நிகழ்ச்சியை வெளிப்படுத்துவதிலும் இரு கவிதைகளும் ஒன்றுபடுகின்றன.

# திருக்குறள் போற்றி மாலை

*முனைவர் பா.வளன் அரசு*
தலைவர், உலகத் திருக்குறள் தகவல் மையம்
3 நெல்லை நயினார் தெரு, பாளையங்கோட்டை – 627 002

1. அகரமாய் அமையும் இறையே போற்றி!
2. ஆற்றலின் ஊற்றாம் மழையே போற்றி!
3. நிறைமொழி மாந்தர் நிலையே போற்றி!
4. மனத்திலும் மாசிலா மாண்பே போற்றி!
5. இயல்பாய் வாழும் ஏந்தலே போற்றி!
6. பேணிக் காக்கும் பெண்மையே போற்றி!
7. அறிவார்ந்த மக்களின் மகிழ்வே போற்றி!
8. அன்பின் வாயிலாம் பண்பே போற்றி!
9. விருந்து புரந்திடும் வள்ளலே போற்றி!
10. இனியவே பேசும் கனிவே போற்றி!
11. செய்ந்நன்றி பாராட்டும் செம்மலே போற்றி!
12. நெஞ்சத்துக் கோடா நேர்மையே போற்றி!
13. சீர்மை பயக்கும் அடக்கமே போற்றி!
14. ஒழுக்கத்தின் வழுவா விழுப்பமே போற்றி!
15. பிறன்மனை நயவாப் பேராண்மையே போற்றி!
16. பொறுத்தார்க்குத் துணையாம் புகழே போற்றி!
17. அழுக்காறு இல்லா வல்லமையே போற்றி!
18. பிறர்பொருள் விரும்பாப் பெருமையே போற்றி!
19. புறம்பேசா வாழ்வின் பெருந்தகவே போற்றி!
20. பயனில சொல்லாப் பெட்டகமே போற்றி!
21. தீவினை அஞ்சும் சால்பே போற்றி!
22. பொதுநலம் கருதும் பொலிவே போற்றி!
23. ஈந்துமகிழும் மாந்தர் ஒளியே போற்றி!
24. உயர்ந்த புகழின் ஆற்றலே போற்றி!
25. அல்லல் நீக்கும் அருளே போற்றி!

26. புலாலை மறுக்கும் சான்றோய் போற்றி!

27. நோற்றலின் ஆற்றலாம் தவமே போற்றி!

28. மழித்தலும் நீட்டலும் வேண்டாய் போற்றி!

29. கள்ளார்க்குத் தள்ளாத வானகமே போற்றி!

30. உள்ளத்தால் பொய்யாத ஒழுக்கமே போற்றி!

31. சினத்தைத் துறந்த திறவோய் போற்றி!

32. மனத்தாலும் தீமை நினையாய் போற்றி!

33. கொல்லாமை பேணும் நெறியே போற்றி!

34. நிலையாமை உணர்ந்த அறிவே போற்றி!

35. செருக்கினை அறுக்கும் துறவே போற்றி!

36. மெய்யுணர்வு போற்றும் மேலோய் போற்றி!

37. அவாவினை அகற்றும் இன்பமே போற்றி!

38. உலகின் இயல்பாம் வலிவே போற்றி!

39. முறைசெய்து காக்கும் இறையே போற்றி!

40. சாந்துணையும் கற்றிடத் தூண்டுவோய் போற்றி!

41. கல்லாமை போக்கும் ஆக்கமே போற்றி!

42. நல்லவை கேட்கும் வல்லோய் போற்றி!

43. அற்றம் காக்கும் கருவியே போற்றி!

44. குற்றம் களையும் விழைவே போற்றி!

45. பெரியோரைத் துணைக்கொள் பேரறிவே போற்றி!

46. இனநலம் பேணும் ஏற்றமே போற்றி!

47. தெரிந்து செயலாற்றும் தெளிவே போற்றி!

48. வலிமை வகையறியும் திறனே போற்றி!

49. காலங்கருதிப் பணியாற்றும் மணியே போற்றி!

50. இடங்கண்டு வினையாற்றும் நுண்ணறிவே போற்றி!

51. திறம்தெரிந்து தெளிந்திடும் தகவே போற்றி!

52. பணிபுரிவோரை நெறிப்படுத்தும் ஆளுமையே போற்றி!

53. சுற்றத்தாரைப் போற்றிடும் வேந்தனே போற்றி!

54. மறவாமைப் பண்பால் மிளிர்வோய் போற்றி!
55. செங்கோன்மைச் சிறப்பால் ஒளிதருவாய் போற்றி!
56. கொடுங்கோன்மை நீக்கும் கொற்றவா போற்றி!
57. அஞ்சத்தக்கவை மேற்கொள்ளா ஆண்மையே போற்றி!
58. பரிவிரக்கம் பாராட்டும் சால்பே போற்றி!
59. ஒற்றரைப் பயன்படுத்தும் பாங்கே போற்றி!
60. ஊக்கத்துடன் செயலாற்றும் ஆக்கமே போற்றி!
61. சோம்பல் போக்கும் எழுச்சியே போற்றி!
62. முயற்சியால் திருவினை ஆக்குவாய் போற்றி!
63. துன்பம்கண்டு துவளாத துணிவே போற்றி!
64. அருவினையால் மாட்சியுறும் அமைச்சே போற்றி!
65. சொல்லுதல் வல்லமை கொண்டோய் போற்றி!
66. வினைத்தூய்மை வேண்டும் வீரமே போற்றி!
67. செயலாற்றும் கொள்கைச் சுடரே போற்றி!
68. வினைபுரியும் முறைமை தெரிந்தோய் போற்றி!
69. நன்றிபயக்கும் தூதரைப் பேணுவாய் போற்றி!
70. ஆட்சியாளருடன் பழகும் பக்குவமே போற்றி!
71. பிறர்கருத்து அறிந்திடும் உணர்வே போற்றி!
72. அவையறிந்து ஆராயும் ஆற்றலே போற்றி!
73. நல்லவையுள் செலச்சொல்லும் நாயகனே போற்றி!
74. நலமெலாம் வழங்கிடும் நாட்டரசே போற்றி!
75. பகையழிக்கும் வல்லரண் வாய்ந்தோய் போற்றி!
76. பொருளாக்கும் வழிமுறை விளம்புவோய் போற்றி!
77. ஊறுஅஞ்சா வெல்படை வேந்தனே போற்றி!
78. படைச்செருக்கு வாய்ந்த பேராண்மையே போற்றி!
79. தோழமைச் சிறப்பை வளர்ப்பாய் போற்றி!
80. தோழமைத் தகுதியை ஆராய்வாய் போற்றி!
81. தலைமுறைத் தொடர்பைக் கணிப்பாய் போற்றி!

82. தீயவரின் தோழமையைத் தேய்ப்பாய் போற்றி!
83. பொருந்தாத் தோழமையைப் புறக்கணிப்பாய் போற்றி!
84. பேதைமை அகற்றும் பெருவலியே போற்றி!
85. புல்லறி வாளரை வெல்லுவாய் போற்றி!
86. இகல்எனும் துன்பத்தைத் தொலைப்பாய் போற்றி!
87. பகையின் சிறப்பியல்பை அறிந்தோய் போற்றி!
88. பகைவரின் இயல்பைத் தெரிந்தோய் போற்றி!
89. உடனிருந்தே அழிப்போரை ஒழிப்பாய் போற்றி!
90. பெரியோரைப் பிழையாத பேறே போற்றி!
91. மனையாளை அஞ்சாத ஆண்மையே போற்றி!
92. விலைமகள் தொடர்பை விலக்குவாய் போற்றி!
93. மயக்கிடும் மதுவை வெறுப்போய் போற்றி!
94. சூதினை நாடாத சான்றோய் போற்றி!
95. நோய்நீக்கும் வழிமுறை நன்குணர்ந்தோய் போற்றி!
96. குடும்பச் சிறப்பினைப் பேணுவாய் போற்றி!
97. தன்மதிப்பை இழக்காத தகவோய் போற்றி!
98. பெருமையின் இயல்பைப் பாராட்டுவாய் போற்றி!
99. பண்பார்ந்த வாழ்வின் சால்பே போற்றி!
100. நல்லியல்பு நாடும் நல்லோய் போற்றி!
101. நன்மையில் செல்வம் வேண்டாய் போற்றி!
102. பழிச்செயல் மேற்கொள்ள நாணுவாய் போற்றி!
103. குடும்பத்தை உயர்த்தும் கொள்கையோய் போற்றி!
104. உழவுத்தொழிலின் மாண்பு உரைப்போய் போற்றி!
105. வறுமையை விரட்டும் வள்ளலே போற்றி!
106. ஆக்கத்தைக் கேட்டுப் பெறும் இரவறிந்தோய் போற்றி!
107. தன்மானம் இழக்காதிருக்கும் வேட்கையோய் போற்றி!
108. கயமையை அழித்திடும் வயவரே போற்றி!
109. இளைஞனை வருத்தும் நங்கைநலம் போற்றி!

110. நங்கையும் நம்பியும் கருத்தொருமித்தல் போற்றி!
111. குமரியும் குமரனும் இன்புற்றிருத்தல் போற்றி!
112. தலைவியின் நலம்பாராட்டும் தலைவா போற்றி!
113. தலைவனும் தலைவியும் உவந்திருத்தல் போற்றி!
114. காலால் நாணம் நீங்கியோய் போற்றி!
115. காதல்மிகை கண்டோர் பேசும்மொழி போற்றி!
116. பிரிவாற்றாத தலைவியின் பெருந்துயர் போற்றி!
117. பிரிவாற்றாத தலைவியின் வருத்தம் போற்றி!
118. தலைவனைக் காணத்துடிக்கும் தலைவியே போற்றி!
119. பசலைநோயால் வாடிடும் வருத்தம் போற்றி!
120. தலைவியின் தனிமைத்துயர் தெரிவிப்பாய் போற்றி!
121. தலைவனை நினைந்திடும் தலைவிநிலை போற்றி!
122. தலைவியின் கனவுநிலை கூறுவாய் போற்றி!
123. மாலைப்பொழுதில் தலைவிதுயர் விளம்புவாய் போற்றி!
124. தலைவியின் எழில்நிலை வாட்டம் போற்றி!
125. தலைவியின் மனவருத்தம் மொழிவாய் போற்றி!
126. தலைவியின் ஒளிவுமறைவிலாப் பேச்சே போற்றி!
127. தலைவனை எதிர்நோக்கும் தலைவியே போற்றி!
128. காதலர்தம் மனக்கருத்தைக் கிளத்துவாய் போற்றி!
129. காதலர்தம் கூட்டத்துடிப்பை நவிலுவாய் போற்றி!
130. தலைவியின் மனப்போராட்டம் பேசுவாய் போற்றி!
131. தலைவியின் சிணுங்கலை விளம்புவாய் போற்றி!
132. தலைவியின் புலவிநுட்பம் மொழிவாய் போற்றி!
133. ஊடலின் உவகையே போற்றி! போற்றி!

# இலக்குவனாரும், குறள் நெறியும்

*முனைவர். நெல்லை ந.சொக்கலிங்கம்*
"பொதிகை", இராதா கிருட்டிணன் வீதி,
நாகமலை, மதுரை–625 019

**இளமையும் கல்வியும் செழுமையும்**

***" செந்தமிழ்ப் புலவன் என்கோ சிறந்தவா சிரியன் என்கோ***
***செந்திற ஆய்வன் என்கோ செழுந்தமிழ் காத்தோன் என்கோ***
***இந்தியை எதிர்த்து வேலை இழந்து செல் சிறையன் என்கோ***
***முந்துநூல் காப்பியத்தை மொழிபெயர்த் தீந்தோன் என்கோ"***
– மொழிஞாயிறு பாவாணர்

பள்ளிக்குப் போகாமல் பையன்களுடன் சுற்றித்திரியும் தன் மைந்தனைப் பார்த்துத் தந்தையர் பலர் "ஊர் சுத்தாதே" "படிப்பு வரலேனா மாடுமேய்க்கப் போடா" என்று திட்டுவது அவ்வப்போது நம் காதுகளில் எட்டுவதுண்டு. அப்படி மாடுமேய்த்தவர் தாம் நம் பேராசிரியர் இலக்குவனார். ஆனால் அவரின் தந்தை இலக்குவனாரை அவ்வாறு மாடுமேய்க்கச் சொல்லவில்லை. அவர் தம் தந்தையை இளமைக் காலத்திலேயே இழந்தமையினாலேதான் இலக்குவனார் மாடுமேய்க்கப்போனார். 'தந்தையொடு கல்வி போம்' என்பது இலக்குவனார் அளவில் ஓரளவு உண்மைதான்! இவருடைய தந்தை மளிகைக் கடை நடத்தி வந்தார். மளிகைக் கடையில் கடன் வாங்கியோருக்கு அளவிறந்த வகையில் அன்பு காட்டினார். விளைவு, கடன் சுமை மிகுந்தது. கடன் அன்பை மட்டுமா முறிக்கும்? இல்லை! இல்லை!! இலக்குவனாரின் குடும்பத்தையே பதம் பார்த்துவிட்டது. பொருள் இழப்பு, ஏழ்மை எல்லாம் சூழ்ந்து குடும்பத்தை அச்சுறுத்தின.

17.10.1910–ஆம் ஆண்டு நாகைப்பட்டினம் மாவட்டத்தில் வாய்மேடு என்னும் சிற்றூரில் சிங்காரவேலருக்கும் இரத்தினத்தம்மையாருக்கும் மூன்றாவது மைந்தனாகத் தோன்றியவரே சி.இலட்சுமணன். செல்வச் செழிப்புடன் சிந்தை மகிழ வாழ்ந்தவர்கள்

இவர்தம் முந்தையோர் ஆவர். தந்தையின் இழப்போடு பண நெருக்கடியும் இணைந்து குடும்பத்தை நெருக்கின; அதனால் பேராசிரியர் திண்ணைப்பள்ளிக்கூடப் படிப்பையும் தொடர இயலாமற் போயிற்று. மாடுமேய்த்து மனத்துயரை மறக்கடித்துக் கொண்டிருந்தார் இலட்சுமணன்; ஆனாலும் அவர் நம்பிக்கையைச் சிறிதும் இழக்கவில்லை. தஞ்சையை ஆண்ட சரபோசி மன்னர்களின் அறக்கொடையில் அரசர் மடத்தில் நிறுவப்பட்டிருந்த பள்ளியில் ஐந்தாம் வகுப்பில் சேர்ந்து படிக்கலானார்.

தம் தாயும் தமையனும் குடும்ப வருமானத்திற்கு முட்டுப்பாடு இல்லாமல் இருக்க வேண்டிப் பொருளீட்ட இலட்சுமணனை வற்புறுத்தினர். இருப்பினும் அவர் அன்னோர் தம் வேண்டுகோளைப் பொருட்படுத்தாமல் திருவையாற்று அரசர் கல்லூரியில் புலவர் படிப்பைத் தொடரப் பெரிதும் விழைந்தார்; அவ்விருப்பம் நிறைவேறியது.

அரசர் மடத்தில் பள்ளி ஆசிரியராக இருந்த திரு.சாமி சிதம்பரனார் இலட்சுமணனை "இலக்குவன்" ஆக்கினார். இவ்வுள்ளத்தில் வேர்விட்டிருந்த தமிழ் உணர்விற்கு உரம் ஊட்டிப் பேணி வளர்த்த பெருந்தகை சாமி சிதம்பரனாரே ஆவார். பெரியாரின் கொள்கைகளிலும் தமிழியக்க உணர்விலும் இலக்குவனாருக்குப் பெரும் ஈடுபாடு ஏற்படச் சாமி சிதம்பரனாரே காரணமாயிருந்தார். இலக்குவனார் புலவராக ஒளிவிட்டுத் திகழ வேண்டும் என்று ந.மு.வேங்கடசாமி நாட்டார், சாமி வேலாயுதம் பிள்ளை, பொன்னண்ணாக்களத்தில் வென்றார் ஆகியோரும் விழைந்து அதற்குத் தூண்டுகோலாக விளங்கினர். இலக்குவனார் புலவர் தேர்வில் முதல் மாணவராகவே திகழ்ந்தார். இதனால் 'விளையும் பயிர் முளையிலேயே தெரிந்து விட்டதன்றோ! மேலும் புதுக்கோட்டை மன்னர் நடத்திய ஒன்பான் இரவுக் கலைப் பெருவிழாவிற்கு அனுப்பப்பட்ட இலக்குவனார் "பண்டிதர்" என்ற பட்டத்துடன், முப்பது ரூபாய்ப் பரிசும் பெற்றுத் தம் தமிழாற்றலைத் தமிழுலகுக்கு வெளிக்காட்டினார். இவ்விளம் வயதிலேயே இலக்குவனார் தமிழ் இதழ்களுக்கு ஆய்வுக்

கட்டுரைகள் எழுதியும் சிற்றூர்களுக்குச் சென்று செந்தமிழ்ப் பொழிவுகள் நிகழ்த்தியும் தம் தமிழறிவைத் தமிழ்ஞாலம் அறியச் செய்தார். கொள்கைப்பிடிப்பும் தமிழ்ப்படிப்பும் இலக்குவனாரின் இவ்வாறு இருகண்களாயின.

### *ஆசிரியப்பணியும் அருந்தமிழ்த் தொண்டும்*

திருவையாற்று அரசர் கல்லூரியில் புலவர் பட்டம் பெற்ற இலக்குவனார் தஞ்சாவூர் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணியமர்த்தப் பெற்றார். குடவாசல், திருவாரூர், நன்னிலம் எனப் பல ஊர்களில் உள்ள பள்ளிகளில் பணியாற்றிவரும் போது இவருடைய தமிழ்ப்பணிக்கு உரமூட்டும் முற்போக்குச் சிந்தையுடைய பட்டம்மாளைத் திருமணம் செய்து கொண்டார். 'வணக்கம் என்று சொன்னால்' 'நீ என்ன சுனாமானவா?' என்ற நிலை அக்காலச் சூழ்நிலை. 1938–இலேயே பள்ளிச் சிறார்களும் அறிந்து கொள்ளும் வகையில் இவர் தொல்காப்பியருக்குத் திருவிழா எடுத்துள்ளார். இந்நிலையில் வலிப்பு நோயினால் துன்புற்ற இவருடைய துணைவியாரை இழக்க நேரிட்டது. இதன்பின் நீதிக் கட்சியைச் சார்ந்த மருத்துவர் திருவேங்கடம் என்பாரின் மகள் மலர்க்கொடியைத் திருமணம் செய்து கொண்டார். பள்ளிப் பணியை விட்டுவிட்டுத் திருவையாற்று அரசர் கல்லூரியில் தமிழ்ப்பணிபுரிய வந்தார்.

'தீ பரவட்டும்' என அறிஞர் அண்ணா அந்நாட்களில் பேசிவந்ததை மறுத்து இலக்குவனார் அண்ணாவிற்குப் பல வினாக்களைத் தொடுத்து மடல் எழுதினார். அண்ணாவும் 'நன்னிலம் நண்பர்க்கு' என்னும் தலைப்பில் விடை எழுதினார். பின் குலசேகரன்பட்டினம், நெல்லை போன்ற இடங்களில் தமிழ்த்துறையில் பணியாற்றியுள்ளார். வகுப்பில் வருகைப் பதிவு எடுக்கும் போது மாணவர்கள் (Present sir, yes sir) ஆஜர் என்று கூறும் முறையை மாற்றி 'உள்ளேன் ஐயா' என்று தமிழில் கூறச் செய்த பெருமை பேரா.இலக்குவனாரையே சாரும்.

ம.தி.தா. இந்துக்கல்லூரியில் பணியாற்றிவரும் போது பேராசிரியர் இலக்குவனார் ‘சங்க இலக்கியம்’ என்னும் வார இதழை நடத்தினார். இதற்கிடையில் பி.ஒ.எல்., எம்.ஒ.எல்., எனத் தம் கல்வித் தகுதியையும் மேம்படுத்திக் கொண்டார். பின் விருதுநகர் செந்திற்குமார நாடார் கல்லூரியில் பணியாற்றினார். விருதுநகரில் பணியாற்றிய காலத்தில் ‘இலக்கியம்’ என்ற இதழை நடத்தினார். உடல் நலிவுற்ற துணைவியார் மலர்க் கொடியின் வேண்டுகோளை ஏற்று இவருடைய தங்கை நீலகண்டேசுவரியைத் திருமணம் செய்து கொண்டார்.

தந்தை வழியாக வந்த சிறிதளவு நிலத்தை விற்றுத் தஞ்சையில் ஓர் அச்சகம் நிறுவினார். இதன் வாயிலாகத் ‘திராவிடக் கூட்டரசு’ என்று தமிழில் ஓர் இதழையும் ‘Dravidian Federation’ என்று ஆங்கிலத்தில் ஓர் இதழையும் தொடங்கி நடத்தினார் என்பது கொண்டு இவருடைய இதழாசிரியப் பணியின் ஏற்றம் நமக்கு நன்கு புலப்படும்.

புதுக்கோட்டை, ஈரோடு, மதுரை எனப்பல இடங்களில் பேராசிரியர் தமிழ்ப் பணியாற்றியுள்ளார். நம்முடைய நோக்கம் அவர்தம் தமிழ்ப் பணி குறித்துக் காண்பதன்று என்பதால் இத்தகவல்களை இந்த அளவில் நிறைவு செய்துவிட்டு இதழாசிரியராகத் தமிழ்த் தொண்டாற்றிய பாங்கினை விரிவாகக் காண்போம்.

**இலக்குவனார் ஏற்று நடத்திய இதழ்கள்**

1. சங்க இலக்கியம் வாரஇதழ் 1945–1947ஆக இருக்கலாம். நெல்லை.
2. இலக்கியம் திங்கள் இருமுறை 1947–1952, விருதுநகர்.
3. திராவிடக் கூட்டரசு–திங்கள் இருமுறை 1952–1952, தஞ்சை (ஆறு திங்கள் மட்டும்)
4. Dravidan Federation - Bimonthly 1952-1952, தஞ்சை
5. குறள்நெறி – தனிச்சுற்றுக்கு – 1954–1957, புதுக்கோட்டை
6. குறள்நெறி – திங்கள் இருமுறை – 1963–1966, மதுரை

7. குறள்நெறி – நாளிதழ் –– 1966–1966, மதுரை (ஆறு திங்கள் மட்டும்)

**எழுத்தாளர் ஆதல்**

ஆங்கிலத்தில் Freelance writer என்று கூறுவர். இவர்கள் சமுதாய உணர்வுகளைக் குறித்துத் தமக்கு ஈடுபாடுள்ள துறைகளில் பொதுமக்கள் நலன் கருதிக் கட்டுரை எழுதுவோர் ஆவர். பேராசிரியர் இலக்குவனாரும் தொடக்க நாளில் பொதுநலன் கருதிய கட்டுரைகளை எழுதிச் சுதந்திர எழுத்தாளராக ஏற்றம் பெற்றுள்ளார். புலவர் கல்லூரி மாணாக்கராக இருந்த போதே பேராசிரியர், பெரியாரின் 'குடியரசு' இதழில் கட்டுரை எழுதிவந்துள்ளார். 'தொழிலாளர்களே தூங்காதீர்கள்' என்னும் தலைப்பில் இவர் குடியரசு இதழில் எழுதிய கட்டுரை இவர் ஒரு பொதுநலன் விரும்பி என்பதைப் பறைசாற்றும். மேலும், 'இந்து நேசன்' *'தமிழ்ப்பொழில்' போன்ற இதழ்களில் இவர் தமிழ் இலக்கியக்* கட்டுரைகள் வரைந்து தம் எழுத்தாற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.

**சங்க இலக்கியம் இதழ் எழுந்த சூழல்**

பேராசிரியர் இலக்குவனார் திருநெல்வேலியில் ம.தி.தா இந்துக் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த போது பேட்டையில் வட்டத் தொட்டிக் குழுவினர் (டி.கே.சி, மீ.ப.சோமு, அருணாசலக் கவுண்டர், இராசகோபாலாச்சாரியார் போன்றோர்) இலக்கியக் கூட்டம் நடத்திவந்தனர். அப்படிக் கூட்டம் நடத்தியவர்கள் "கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்". என்று முழக்கம் செய்வர். திடீரென்று கன்னித் தமிழ் வளர்க்கப் புறப்பட்ட இவர்கள், "சங்க இலக்கியத்தைத் தூக்கி வங்கக் கடலில் எறிவோம்" என்று கூடுதல் முழக்கம் ஒன்றையும் இணைத்து முழங்கினர். கூட்டத்திற்கு வந்திருந்த பொதுமக்களும் சேர்ந்து என்ன சொல்கிறோம் என்று தெரியாமல் கோவிந்தாப் போட்டனராம். இன்றைக்குத் தமிழ் செம்மொழித் தகுதியைப் பெற்றுச் சிறந்திருப்பதற்குச் சங்க இலக்கியம் தானே காரணம். கால்டுவெல், *பரிதிமாற்கலைஞர், மறைமலை அடிகளார் போன்ற சான்றோர்கள் தமிழை* உயர்தனிச் செம்மொழி என்று ஆணித்தரமாக நிறுவியிருந்தனர்.

இவற்றை எல்லாம் அறிந்துணராமல் கம்பனைப் போற்ற முனைந்த சிலர் சங்க இலக்கியங்களைக் கடலில் வீசி எறியத் துணிந்தனர். இத்தகாத முழக்கமே பேராசிரியரைச் 'சங்க இலக்கியம்' என்னும் பெயரில் ஓர் இதழைத் தொடங்குமாறு தூண்டிற்று. இது ஒரு ஏடாக மலர்ந்தது.

கிரேக்க, இலத்தீன் வீரயுகப் பாடலுடன் ஒப்பவைத்து எண்ணத்தக்க வீரயுகப் பாடல்களை உடையன சங்க இலக்கியங்கள். தமிழர்தம் பண்பாட்டுப் பெட்டகமாய் வரலாற்றுப் பதிவேடாய் விளங்கும் சங்க இலக்கியத்தைக் குறைத்து மதிப்பிட்டவர்களுக்குச் சவுக்கடி கொடுத்துச் சிந்திக்க வைக்க வேண்டும் என்னும் சீரிய நோக்கில் பேரா.இலக்குவனார் சங்க இலக்கியம் என்னும் வார இதழை 1945–இல் தொடங்கினார்.

'சங்கத் தமிழ் பாடித் தமிழர் புகழ் வளர்ப்போம்' என்ற முழக்கத்துடன் பேரா.இலக்குவனார் 1945–ஆம் ஆண்டிலேயே நம் நெல்லைச் சீமையிலே தமிழ் எழுச்சியை ஊட்டியுள்ளார். இவ்விதழைப் பற்றிய எடுப்பான விளம்பரம் இங்கே அறியத்தகும்.

**இலக்கியங்களில் சிறந்தது சங்க இலக்கியமே**

**ஆசிரியர் உதவியின்றி அஞ்சல் வழியாகப் படிக்கலாம்**
**வாரம் ஒரு பாட்டு இனிய, எளிய முறையில் கற்கலாம்.**
அஞ்சல் செலவு உட்பட ஆண்டுக்கட்டணம் ரூ.6.00
விவரங்களுக்கு இரண்டணாத் தபால் தலையுடன் எழுதுக.
**வித்துவான் சி.இலக்குவன், எம்.ஓ.எல்.,**
தமிழ் விரிவுரையாளர், இந்துக் கல்லூரி, திருநெல்வேலி

நம் இந்தியத் திருநாட்டில் புது தில்லிப் பல்கலைக்கழகம் தான் முதன்முதலில் அஞ்சல் வழியே பயிலும் கல்வியை – அதாவது முறைசாராக் கல்வித் திட்டத்தைத் தொடங்கியது என்பர். ஆயின் நம் பேராசிரியர் இலக்குவனரோ நம் நாடு உரிமைபெறுதற்கு முன்பே அஞ்சல் வழிக் கல்வித்திட்டத்தை எண்ணிச் செயல்படுத்த

முனைந்துள்ளார் எனில் இவர்தம் கல்வி பற்றிய எதிர்காலவியல் / Futurology / சிந்தனை இனிது பெறப்படும். சங்க இலக்கியத்தைப் பொதுமக்கள் இலக்கியமாக்க வேண்டும் என்ற துடிப்பு இதனால் நன்கு வெளிப்படுகின்றது. சங்க இலக்கியம் வார வெளியீடாக 1945–1946 – இல் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் என்கிறார் பேரா.இ.மறைமலை. ஆயினும் இவ்விதழ் இதழ் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படவில்லை. இவ்விதழின் முகப்பிலே தமிழ் உணர்ச்சியூட்டும் முழக்கங்கள் அச்சிடப்பட்டன. மாமூலனாரின் முப்பது பாடல்களுக்கும் ஒவ்வொரு இதழிலும் அரும்பதஉரை, பொழிப்புரை வழங்கியதோடு எளிய முறையில் எல்லோரும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் நாடகமாகவோ, சிறுகதையாகவோ, அப்பாடலை விளக்கியுள்ளமை அறியத்தகும். சங்கப் பாடல்களைப் பொதுமக்கள் இலக்கியமாக்கும் முயற்சியில் பேரா.இலக்குவனார் முன் முயற்சி எடுத்துள்ளார் என்பது இச்செயலால் உறுதியாகின்றது.

*"அறிஞர்தம் இதய ஓடை*
*ஆழநீர் தன்னை மொண்டு*
*செறிதரும் மக்கள் எண்ணம்*
*செழித்திட ஊற்றி ஊற்றிக்*
*குறுகிய செயல்கள் தீர்த்துக்*
*குவலயம் ஓங்கச் செய்வாய்'*
*நறுமண இதழ்ப் பெண்ணே உன்*
*நலம்காணார் ஞாலம் காணார்"*

(பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப.186)

என்று எக்காளமிடும் பாவேந்தர் வழியிலே தமிழ்த்தடம் பதித்தவர் பேரா.இலக்குவனார் என்பதே உண்மை.

●□●□●□●□●□●

●□●□●

# அறிவியல் வளர்ச்சிக்கு முன்னிருந்த பெண்ணியம்

*முனைவர். சு.குழந்தைவேல் பன்னீர்செல்வம்*
விரிவுரையாளர், கல்வியியல்துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி–23

அறிவும் அறிவியலும் வளர்ந்த சென்ற நூற்றாண்டில்தான் பெண்ணியம் பேசப்பட்டது. இது ஆணுக்கு எதிரானதோ, ஆணை ஒதுக்கியதோ அன்று; அதற்கு மாறாக ஆணும் பெண்ணும் சம உரிமையுடன் இணைந்து வாழும் கோட்பாடாகும். பெண்ணுக்கான உரிமையும் கடமையும் கலந்து இயங்கும் பண்பே பெண்ணியம் எனலாம்.

## பெண்ணியம்

'பெண்ணியம்' என்ற சொல்லானது **'Feminism'** என்ற ஆங்கிலச் சொல்லைக் குறிப்பதாகும். .இதற்கு 'The advocacy of women's rights on the ground of the equality of the sexes' என்று கூறுகிறது அகராதி. பெண்களின் தாழ்நிலைகளை ஆராய்ந்து, அதனை மாற்றுவதற்கு மேற்கொள்ளும் வழிமுறையே பெண்ணியம். இது அறிவுத்துறை சார்ந்த ஒரு சமூக விஞ்ஞானமாகும். இச்சொல் தமிழில் பெண்ணியம் என்று வழங்கப்படுகிறது. பெண்ணியத்திற்கு பெண்ணிலைவாதம், பெண்ணிலை ஏற்பு, மகளிரியல், பெண்நலக்கொள்கை என்று பல சொற்களைக் கூறலாம். எனவே, தற்காலத்தில் விரைந்து வளர்ந்து வரும் ஒரு சமூக அறிவியலே பெண்ணியம் என்பதற்கு உலகச் சமுதாயம் அனைத்திற்கும் முக்காலத்திற்கும் ஏற்றதொரு விளக்கத்தைக் கொடுக்க முடியாது. இது சமுதாயத்தின் வரலாற்றையும், பண்பாட்டையும், உணர்வையும், செயலையும் பொறுத்து மாறுபடுவதென்றாலும், பெண்ணியம் என்ற சொல்லுக்கு, பெண்கள் சமூகத்திலும், அலுவலகங்களிலும் வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும் அந்நிலையை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு செயற்படும் முயற்சிகளும் என்று விளக்கமளிக்கிறார் ச.முத்துச்சிதம்பரம்.

இதன்படி, பாலின அடிப்படையில் சமூகத்தின் வழக்கத்திலிருக்கும் ஏற்றத்தாழ்வுகளை மாற்றுவதற்கு முயல்வோர் பெண்ணியவாதிகளாவர். பெண்ணியம், பெண்களுக்கு மட்டும் சமத்துவம் வேண்டுமென்று கேட்கவில்லை. சமத்துவச் சமுதாயம் உருவாக வேண்டுமென்பதே அதன் அணுகுமுறையாகும். சமுதாயத்தில், ஆணும், பெண்ணும் பாலினப்பாகுபாடின்றி மனிதர்களாக மதிக்கப்பட வேண்டும்; மனிதமேம்பாடே பெண்ணியத்தின் நோக்கம் என்பது இதன்மூலம் புலப்படுகிறது. மக்கள் அடிமைகளாக வாழும் சமுதாயத்தில், பெண்கள் மட்டுமின்றி ஆண்களும் அடிமைகளே. அங்கு ஆண்–பெண் சமஉரிமை வேண்டும் என்று கேட்பதில் பொருளில்லை. இருவருக்கும் பொதுவான, நேர்மையான சமுதாயம் உருவாக வேண்டும் என்று பெண்ணியம் விரும்புவதால், இதுவரை உருவாகாதவொரு சமத்துவச் சமுதாயத்தை உருவாக்குவதையே, குறிக்கோளாகக் கொண்டுள்ளதை உணர முடிகிறது.

**பெண்ணின் மேன்மை**

உலகில் மானிடராய்ப் பிறந்தோர் வாழ்க்கையின் பயனைத் துய்த்தற்கு இல்லறம், துறவறம் என்னும் இருவழிகள் உள்ளன. அவற்றுள் முன்னையது கணவனும், மனைவியுமாய் இருவர் சேர்ந்து நடத்தும் அறம். அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை 'இல்லறமல்லது நல்லறமன்று' போன்றவை இவற்றை வலியுறுத்தும். இந்த நல்லறம் செழுமையாகவும் சிறப்பாகவும் சீர்பெற, கணவன் மனைவி இருவருமே ஒழுக்கசீலர்களாகவும், உயர்ந்த விழுமியர்களாகவும் இருக்கவேண்டும். கணவன் உடலென்றால் மனைவி உயிர். உடலில் எந்த உறுப்பு பழுதுபட்டாலும் உடல் இருக்கும். ஆனால் உயிர் பழுதுபட்டால் உடலிருந்தும் பயன் இல்லை. எனவே, குடும்பத்தில் ஒரு ஜீவநாடி, உயிரோட்டம் ஒளிவிளக்கு எல்லாமே பெண்ணேதான் என்கிறார் இந்திரா சோமசுந்தரம். ஒருபுறம் குழந்தைமணம், பலதாரமணம், சதி, விதவைவாழ்வு, பரத்தை வாழ்வு, மற்றொருபுறம் மூடபக்தி, அறியாமை, கல்லாமை போன்ற செயல்கள். இவைகளனைத்தும் பெண்ணை முன்னேற விடாமல் இறுகப் பின்னப்பட்ட வலைகளாகும்.

இந்தியாவில் வறுமை, சாதி, கல்வியின்மை, மூடநம்பிக்கை போன்றவற்றால் பாதிக்கப்பட்ட பாமர மக்களின் முன்னேற்றம் எவ்வாறு சமுதாயப் பிரச்சனையாக இருந்ததோ, அதுபோன்றே பெண்களுடைய முன்னேற்றமும் உரிமையும் சமுதாயச் சிக்கல்களாக விளங்கின. எனவே, ஒரு நாடு முன்னேற்றம் அடைந்துள்ளதெனில் அங்குள்ள பெண்மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்தைக் கொண்டே கணிக்கப்படுகிறது என்று பொருள். ஆனால் நமது நாட்டில் அறியாமை, மூடநம்பிக்கை, தீவிர கடவுள்பக்தி போன்றவை பெண்களைச் சுயசிந்தனை அற்றவர்களாகச் செய்துள்ளன. இம்முட்டுக்கட்டைகள், பெண்கள் தங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளவும், உணர்ந்து கொள்ளவும் சக்தியற்றவர்களாக ஆக்கியுள்ளன.

பெண் அன்பு செய்பவள். பலவீனமானவள். மென்மையானவள். ஆணின் பாதுகாப்பில் முழுமை அடைபவள் என்பதற்கெல்லாம் அறிவியல் அடிப்படையில்லை. பெண்மை, ஆண்மை என்பது பண்பாட்டுவழி ஏற்படுத்தப்பட்ட வெறும் புனைவுகளே. மேலைநாடுகளில், குறிப்பாக முன்னேறிய நாடுகளில் பெண்களின் நிலையை, மாதர்கள் வீட்டு அடிமைகள் என்று அழைக்கப்படுவதில் வியப்பில்லை; நாகரிகம் அடைந்த எல்லா நாடுகளிலும் முன்னேற்றம் அடைந்த சில நாடுகளிலுங்கூட மாதர்கள் நிலை இவ்வாறுதான் உள்ளது.

'பெண்' என்பவள் ஆண் துணையைத் தேடி நிற்கும் ஒரு பலவீனப்படைப்பு. அவள் ஆணின் சொத்து என்றே ஆணுலகம் நினைக்கிறதென்றாலும், இன்றைய சமுதாயத்தில் பெண்மக்கட்குப் பல உரிமைகள் கிடைத்திருத்தலையும் நாம் மறுக்க இயலாது. எடுத்துக்காட்டாக கல்வி உரிமை, ஆண்களோடு சரிசமமோடு நின்று பணிபுரியும் உரிமை, நாடாளும் உரிமை என்று பல உரிமைகள் கிடைத்துள்ளன என்கிறார் சாலை இளந்திரையன். அதர்வண வேதம் பெண் பிறப்பதையே விழா எடுப்பதற்கான நிகழ்வாகக் கருதுகிறது. நடைமுறை வாழ்க்கையில், பெண்கள் இந்த அளவு உரிமை பெற்றுள்ளனர் என்றால் அப்பெருமையனைத்தும் பெண்ணியச் சிந்தனையாளர்களையே சாரும்.

சங்கம் மருவியகால இலக்கியங்களில் பெண்வெறுப்புக் கோட்பாடுகள் அரும்பத் தொடங்கின. குறிப்பாக சமணரால் எழுதப்பட்ட நாலடியார், திரிகடுகம், சிறுபஞ்சமூலம் முதலானவற்றுள் உணர முடிகிறது. சீவகசிந்தாமணியில் பெண்பிறப்பு கொடியது என்றும் அப்பிறப்பை ஒழிக்க வேண்டும் என்றும் திருத்தக்கதேவர்,

*"விளக்கொளி விசும்பில் வெண்கோட் இளம்பிறை சூழ்ந்த மின்போல்/*
*வளங்கெழு வடத்தைச் சூழ்ந்துவான் / பொனான் டினைப்பச் சேந்த*
*இளங்கதிர் முலைகை டம்மா / லிவளைமார் பெழுதி வைகிற்/*
*றுளங்குபெண் பிறப்பிற் றோழி / யினிதெனச் சொல்லி நிற்பார்."*

*என்று பெண்ணை இழிவாகக் கூறுகிறார்.*

தொல்காப்பிய முதற்நூற்பாவிற்கு உரை எழுதிய இளம்பூரணர், அகரம் தானும் இயங்கி தனிமெய்களை இயக்கும் சிறப்பால் முன் வைக்கப்பட்டது. னகரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதல் சிறப்பால், பின் வைக்கப்பட்டது என்கிறார். இவ்விளக்கத்தில் ஆண்மகனே வீடுபேற்றிற்கு உரியவன் என்ற குறிப்பு வெளிப்படையாகவே இடம்பெற்றுள்ளது. இது, சமணசமயத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகும். ஆண் வீடுபேற்றிற்கு உரியவன்; பெண் வீடுபேற்றிற்கு உரியவள் அல்லள் என்பதைச் சமண நூலான மேருமந்திர புராணம்,

*"இந்திரன் தேவிமார்க்கும் இறைமை*
*செய் முறைமை இல்லை*
*பைந்தொடி மகளிர் ஆவார்*
*பாவத்தால் பெரிய நீரோ"*

என்று குறிப்பிடுகிறது சமணக்காப்பியமான சூளாமணி. 'பெண் மானுடராகக் கருதத்தகும் தகுதியை உடையவள் அல்லள்' என்பதை,

*'அன்னை அலிகரு டாதீ யவர்களை*
*மண்ணுயர் ஞாலத்து மானிட ராகவைத்*
*தெண்ணுவர் யாருளர்? எல்லா மையினும்*
*பெண்ணின் பிறவும் பீடுடைத் தன்றே'*

என மொழிகிறது.

பெண்பிறவி, இழிபிறவி என்ற கோட்பாடானது காலப்போக்கில், பெண் வெறுப்புக் கோட்பாடாகவும் பெண் மறுப்புக் கோட்பாடாகவும் விரிந்தது. இதன் விளைவாகப் பெண்குழந்தையை வெறுக்கும் போக்கு வளர்ந்தது. பிறக்கும்போதே கொன்றுவிடுவது தமிழகத்தின் சில இடங்களில் வேரூன்றியது. திருமணமுறை வேண்டாதது, தவறானது என்றதொரு கொள்கைகூட பரவியது.

சமணசமயத்தின் பெண்வெறுப்புணர்வு, ஏனைய இந்திய சமயங்களிலும் பரவிற்று. 'இந்து சமயத்துத் தலைமை நூலாகப் போற்றப்படும் பகவத்கீதையின் ஒன்பதாம் அத்தியாயத்தில் 'வையோனிகளில் மனிதநேயம், ஜனித்தவர்களாகிய ஸ்தீரிகள்' என்றும் 'கீழான பிறவிகளாக இருக்கும் பெண்கள்' என்றும் கிருஷ்ணபரமாத்மாவால் குறிக்கப்படுகிறது. இந்தியாவில் இந்துமதச் சட்டநூலாகப் போற்றப்படும் மனுதர்ம சாத்திரத்தில், மனித சகோதரத்துவம், சமத்துவம், பெண்ணின் இயற்கைப் பெருமை அனைத்திற்கும் எதிரானதாக வரையறுக்கப்பட்டுள்ளது.

மனுதர்மம் பெண்ணைப் பெரிதும் இழிவுபடுத்தியதால், மனித உரிமையைப் பறிக்கும் சாஸ்திரம் என்று இதனைக் கூறலாம். பெண் கல்வியிலிருந்து விலக்கப்பட்டவளாகவும் இழிபிறப்பாகவும் கருதப்பட்டிருக்கிறாள். மேலும், பெண்களுக்கு விவாகமே உபநயனமாகும்; கணவனுக்குப் பணிபுரிந்திருத்தலே அவர்களது குருகுலவாசமெனப்படும்; இல்லத்தைக்காத்து நடத்துதலே அவர்களுக்குச் சமிதாதானமாகும். வேதகோஷங்கள் இல்லாத வேள்வியிலும், பெண்களோ பேடிகளோ இயற்றும் ஒன்றிலும் அந்தணர் புசித்தல் ஆகாது என்று பெண்பிறப்பை இழிவாகக் கருதும்போக்கு இந்திய சமயங்களில் அமைந்துவிட்டது. நமது புராணங்களிலும் இதிகாசங்களிலும், காவியங்களிலும் தெய்வநிலையில் வைத்துப் பேசப்பட்ட பெண்ணின் தெய்வீக நிலை நடைமுறையில் மண்ணுக்குள் தள்ளப்பட்டது. சமூகச் சீர்திருத்தம் செய்யப்புகுந்த பிரம்மசமாஜம் பெண்களின் முன்னேற்றத்திற்கும், இழைக்கப்பட்ட தீமைகளை எதிர்த்தும், குழந்தை மணத்தை எதிர்த்தும், சொத்துரிமையை வலியுறுத்தியது. அதோடு பலதாரமணத்தை எதிர்த்து, கொடிய சதி வழக்கத்தை அழிக்க முயன்றது.

இத்தகைய நிலையிலிருந்து விடுபட பெண்களுக்கும், நசுக்கப்பட்ட மக்களுக்கும் கல்வி ஒன்றே சரியானவழி என்று பல கல்விக்கூடங்களை நிறுவியது.

இப்படி படிப்படியாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியப் பெண்ணியம் எழுச்சியுற்றது. மாறி அமைந்த பொருளாதார அமைப்பு, இந்தியர்களின் ஆங்கிலக் கல்வியறிவு, மேலைநாட்டுப் பெண்ணிய இயக்கங்களின் வெற்றி, கிருத்துவமதம் மற்றும் பாதிரிகளின் தூண்டல், இந்து சமயத்தையும், சமூகத்தையும் சீர்திருத்தி அமைக்க வேண்டும் என்ற இந்திய அறிஞர்களின் ஆர்வம், காலப்போக்கில் இந்தியர்களிடம் தோன்றிய சிந்தனை வளர்ச்சி போன்ற காரணங்களாலும், தேவைகளாலும் இந்தியப் பெண்ணியம் எழுச்சியுற்றது என்று கூறலாம்.

சமணசமயம் தொடங்கிவைத்த, செம்பாதி மக்களைப் புறக்கணிக்கும் இப்பெண்ணிழிவுக் கோட்பாட்டிற்கு ஊற்றுக்கண் எப்படி, எங்கே, எப்போது தொடங்கியது என்பதற்குத் தமிழ் இலக்கிய வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்ததில், பின்வரும் சான்றுகள் கிடைத்தன. தொல்காப்பியத்தில்,

1. ஆணின் குணங்களாகப் பெருமையும், உரனும், பெண்ணின் குணங்களாக அச்சம், நாணம், மடம் ஆகியவை களவியலில் காட்டப்பட்டுள்ளன.

2. பால்பற்றிய கருத்துக்களை, நிரல்பட அமைக்கும் வாய்ப்பு நேரும்போதெல்லாம், ஆண்பால் தொடர்பானவற்றை முதலிலும், பெண்பாலைப் பின்னிடத்திலும் வைத்து மொழிகிறார்.

3. வாழ்வில், ஆண் தன் உணர்வுகளை வெளிப்படப் புலப்படுத்தவும் பெண் புலப்படுத்தலாகாது என்றும் கூறுகிறார். அறத்தொடுநிலை என்ற குறிப்புரை வழியில்தான் பெண் தன் விருப்பத்தைப் புலப்படுத்த வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

4. உயிர் சிறந்தது; உயிரைவிட நாணம் சிறந்தது; நாணத்தைவிடக் கற்பு சிறந்தது என்று பெண் கற்பை மட்டும் வற்புறுத்துகிறார். 'ஆண்கற்பை' வற்புறுத்தவில்லை.

5. ஆண், பலரை மணந்து கொள்வதை உடன்படுகிறார்.

6. பெண்ணின் கடமையாக விருந்து புரத்தலையும், சுற்றம் ஒம்புதலையும் சுட்டுகிறார்.

7. பொருள்வயின் பிரியும் பொழுது பெண்டிரை விலக்குகிறார். எதிர்நோக்கிய பிரிவு என்றாலும் ஆண்கள் கடல்கடந்து செல்லும் போதும் தன் மனைவியரை உடனழைத்துச் செல்லலாகாது என்கிறார். மேற்கண்ட செய்திகளால் தொல்காப்பியர் காலத்திலேயே பெண்களுக்குச் சமஉரிமை அளிக்கப்படவில்லை என்று அறியலாம்.

மருதத்திணைப்பாடல்கள், திணைப்பாகுபாடுகள் ஆகியன பெண்கள் பெற்றிருந்த பின்நிலைமையைப் பிரதிபலிக்கின்றன. கொழுநனைப் பேணுதல் வேண்டும், இல்லம் தேடிவரும் விருந்தினரை ஒம்புதல் வேண்டும் ஆகியனவும்; இற்செறிப்புக் கோட்பாடும், திருமணத்தில் பெற்றோர் இடையீடு ஆகியனவும் கூறப்படுகின்றன.

*" வினையே ஆடவர்க்கு உயிரே; வாள்நுதல்*
*மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்"*

என்ற குறுந்தொகைப் பாடல் அக்காலப் பெண்களின் நிலையைச் சரியாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. ஆண்கள் வெளிவேலைக்குச் செல்வதற்கு உரியர். பெண்கள் வீட்டு வேலை செய்தற்கு உரியர். ஆண்களுக்கு வேலை உயிர்போன்றது. பெண்களுக்கு ஆண்கள் உயிர் போன்றவர் என்று வரையறுக்கிறது. சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள கைம்பெண் நோன்பு பற்றிய குறிப்புகள் கணவன் இறந்தால் உடன்கட்டையேறி, இறந்துபடுவதே சிறந்தது; அதுவே முதற்கற்பு என்ற கோட்பாடுகள் பெண்ணினத்தின் இரண்டாம் நிலையைப் புலப்படுத்தும். சங்ககால மக்கள் பின்பற்றி வந்த சில மரபுகளை வேண்டாதன என்று துணிந்து கூறியவர் திருவள்ளுவர். பலதார ம்ணத்தையும், பரத்தையர் உறவையும் மருதத்திணைப்பிரிவையும் உடன்படாது, பெண்ணிழிவுப் போக்கிற்கு எதிராகக் குரல் கொடுத்தார். தம்முடைய திருக்குறளில் பலதாரமணத்தையோ பரத்தையர் பிரிவையோ, உறவையோ உடன்பட்டாரில்லை.

## 2008 ஜூலை மாதம் புரவலர் கட்டணம் வழங்கிய பெருமக்கள்

1. *முறசை சுந்தரேச சிவம்* M.A., M.Phil (முறசை மகிமை ஆசிரியர்)

## வாசகர் வாசகம்

மதிப்புயர் செந்தமிழ் ஆசிரியப் பெருந்தகை அவர்கட்கு! வணக்கம். செந்தமிழ் தொகுதி 102 பகுதி 5 மேத்திங்கள் இதழ் கிடைத்தது நன்றி. அவ்விதழ் பற்றிய கருத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கட்டுரைகள் சிறப்பாக இருந்தன. குறிப்பாகத் தமிழில் முதன் முதலில் முனைவர் பட்டம் பெற்ற சாஸ்திரி பற்றிய கட்டுரை அருமை. பல தகவல்கள் அடங்கிய கருத்துக்கருவூலம் என அக்கட்டுரையைப் பாராட்டுகிறேன்.

வள்ளல் பாண்டித்துரைத் தேவர் கட்டுரையில் தேவர் தமிழ்ச் சங்கம் வைத்துத் தமிழ் வளர்க்கக் காரணமாயிருந்தவர் திருப்பாதிரிப்புலியூர் சிவத்திரு. ஞானியார் அடிகள் என்ற செய்தி இணைக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஞானியாரின் சைவத் தொண்டையும் தமிழ்த் தொண்டையும் கேள்விப்பட்ட தேவர் திருப்பாதிரிப்புலியூர் அடிகளைச் சந்தித்த போது "தமிழ் வளர்ந்த மதுரையில் நீங்கள் நாலாம் சங்கம் வைத்துத் தமிழ் வளர்க்க வேண்டும்' எனத் தூண்டியதால் தம் உடன்பிறப்பான பாஸ்கர சேதுபதியுடன் கலந்து, சங்கம் நிறுவ முனைந்தபோது அடிகளைக் கொண்டே தொடங்க வைத்தார்கள் என்பது வரலாற்றுப் பதிவு. அக்கட்டுரையின் இறுதியில் முதல்வர் முனைவர் சின்னப்பா கூறியது போலத் "தேவர் குறள் காத்த தேவர் பாண்டித்துரைத் தேவர்" என்பது படிப்போர் அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கும் செய்தியாகும்.

நன்றி.

*தெ. முருகசாமி*
முன்னாள் முதல்வர்
இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி.

ஆசிரியருக்கு வணக்கம். 'செந்தமிழ் இதழ் பொதுவாக, செந்தமிழை விழைவார்க்கு இனிக்கவே செய்கின்றது. இதழ்மணம் இதழுக்கு மெருகூட்டுகின்றது. நல்ல செந்தமிழ்க் கட்டுரைகள் தமிழறிஞர்களுக்கும் புலவர்களுக்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. எனினும் தமிழ் எழுதப் படிக்கக்கூடிய பொதுமக்களுக்கு விருப்பத்தைத் தருமா? என்பதே ஐயம். இனிய எளிய கட்டுரைகள்–கவிதைகள்–சிறுகதைகள் போன்றவை பிரசுரிக்கப்படுமாயின் நன்று! தமிழ்ச் சான்றோர் பற்றிய கட்டுரைகள் தாராளமாக இடம் பெறுதல் வேண்டும். சங்க இலக்கியப்பாடல்கள் பொருளுடன் இடம் பெறல் வேண்டும். மொத்தத்தில் பொதுமக்களும் சுவைக்கக் கூடியனவாக இதழ் வெளிவருவதே சாலச் சிறந்தது.

*புலவர் செ. ஜ:ஃபர் அலீ,*

தமிழாசிரியர், அல்–அமீன் மெட்ரிக் மேனிலைப்பள்ளி,
கும்பகோணம் – 612001

*****

வரலாற்றுப் புகழ்மிக்க மதுரைத் தமிழ்ச் சங்கத்தினுடைய செயலாளர் உயர்திரு. இரா.அழகுமலை M.A., M.Phil அவர்களுக்கு இரா.சுரேஷ் (*முறசை மகிமை ஆசிரியர்*) வணக்கமாய் எழுதுவது. நலம். நாடுவதும் அதுவே.

தமிழ்ச்சங்க வெளியீடான செந்தமிழ் ஏப்ரல் மாத இதழ் கிடைக்கப்பெற்றேன். அதில் தங்களின் கைவண்ணத்தில் வெளியான "*முறசை மகிமை*" நூல்மதிப்புரையும் கண்டேன். மட்டில்லா மகிழ்ச்சி கொண்டேன்.

அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளும் விதமாக இந்தக் கடிதம் எழுதுகிறேன். (இதழ் எனக்குத் தாமதமாகக் கிடைத்ததால் தாமதமாகக் கடிதம் எழுதுகிறேன். அதற்காக வருந்துகிறேன்).

நூலை ஆழ்ந்து படித்து ஆய்வுரை வழங்கியுள்ளீர்கள் என்பதை அதனைப் படித்தவுடன் புரிந்து கொள்ள முடிகிறது. முறசை மகிமை நூலுக்கு மகுடம் சூட்டும் வகையில் தங்களின் மதிப்புரை அமைந்துள்ளது.

தங்களின் மேலான மதிப்புரைக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முறசை சுந்தரேச சிவம் (இரா.சுரேஷ்)* M.A., M.Phil
D–122, 4வது குறுக்குத் தெரு, வ.உ.சி. நகர், கணபதி, கோவை – 641 006

## மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்கு தினமணி ஆசிரியர் வருகை

தினமணி நாளிதழ் ஆசிரியர் **திரு.கே.வைத்தியநாதன்** அவர்கள் மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்திற்கு 29.05.08 ஆம் நாள் வருகை தந்து தமிழ்ச் சங்கத்தைப் பார்வையிட்டார்.



தற்போதைய தமிழ்ச்சங்கப் பணிகள், செந்தமிழ்க் கல்லூரியின் சிறப்பியல்புகள், பாண்டியன் நூலகம், கணினி மையம் ஆகியவற்றைக் கண்டு பேருவகையுற்றார். அன்னாரை மதுரைத் தமிழ்ச்சங்கச் செயலாளர் **திரு.இரா.அழகுமலை** அவர்களும், செந்தமிழ்க் கல்லூரிச் செயலாளர் **திரு.இரா.குருசாமி** அவர்களும், கல்விப்பேரவை உறுப்பினர் **திரு.க.செயபால்போஸ்** அவர்களும், செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் **திரு.க.சின்னப்பா** அவர்களும், மதுரை சேதுபதி மேல்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் **திரு.கோபால்** அவர்களும் வரவேற்றனர்.


தொடர்பு முகவரி :

**ஆசிரியர், செந்தமிழ்,**

**மதுரைத் தமிழ்ச்சங்கம்,**

**மதுரை–625001.**

தொலைபேசி : **0452-6575615**

RNI Regd. No.: 5508/56 July 2008


## ஆசிரியர் குழு

டாக்டர் திரு. ந. சேதுராமன்

திரு. இரா. குருசாமி

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் கதிர் மகாதேவன்



அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA


பெறுநர் / To,